**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No.139/2024**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்லத்துரை | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பொன்னுச்சாமி | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | கடையம் | வயது | : | 84 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 17th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கடையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். 27.10.2020 அன்று காலை 10.00 மணியளவில் என்னுடைய பேத்திக்கு திருமணம் முடிந்து பாத்திரங்களை லோடு ஆட்டோவில் ஏற்றிக்கொண்டிருந்தோம். அப்போது, ஆஜர் எதிரி (சதீஷ்குமார்) பைக்கில் வந்துகொண்டிருந்தார். அப்போது, ஆட்டோவை மாற்ற சொன்னார். நான் "ஆட்டோவில் பொருட்களை ஏற்றி கொண்டிருக்கிறோம். வேறு பாதை வழியாக செல்லுங்கள்" என்று கூறினேன். சதீஷ்குமார் திமிராக பேசினார். பின்னர் அவர் சென்று விட்டார். சிறிது நேரம் கழித்து எதிரிகள் 3 பேரும் கம்புடன் என் வீட்டிற்கு வந்தார்கள். எதிரிகள் கம்பால் என்னையும், சந்தனகுமாரியையும், லட்சுமியையும், பரமசிவனையும், வைகுண்டமணியையும் அடித்தார்கள். எதிரிகள் (சதிஷ்குமார், பிரவின்குமார்) ஆகியோர்கள் வைகுண்டமணியின் கழுத்தில் கட்டையால் குத்தினார்கள். என்றைக்கு இருந்தாலும் உன் சாவு எங்கள் கையில் தான் என்று எதிரிகள் கொலை மிரட்டல் செய்தார்கள்.

நானும், வைகுண்டமணியும் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தோம். போலீசார் அங்கு வந்து விசாரித்தார்கள். நான் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ 1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.19 13:17:50 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : CC.No.139/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வைகுண்டமணி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பரமசிவன் | தொழில் | : | மெக்கானிக் |
| கிராமம் | : | கடையம் | வயது | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 17th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கடையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 செல்லத்துரை எனக்கு தாத்தா. 27.10.2020 அன்று காலை 10.00 மணியளவில் என்னுடைய தங்கையின் திருமணம் முடிந்து பாத்திரங்களை ஆட்டோவில் ஏற்றி கொண்டிருந்தோம். அப்போது, எதிரி சதீஷ்குமார் அங்கு பைக்கில் வந்தார். எங்களை அவதூறான வார்த்தைகளால் பேசினார். ஆட்டோவை எடுத்தால் தான் நான் செல்வேன் என்று கூறினார். பின்னர், எதிரிகள் 3 பேரும் கம்புடன் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். எதிரி பிரவின்குமார் என்னுடைய கழுத்தில் கம்பால் அடித்தார். என்னுடைய வேஷ்டி, ஜட்டியை கிழித்தார். கண் ஆப்பையை எடுத்து பிரவின்குமார் என்னுடைய தாத்தா செல்லத்துரையின் கண் புருவத்தில் அடித்தார். என்னுடைய அப்பாவின் 2 கன்னங்களிலும் எதிரி பிரவின்குமார் கையால் மாறி, மாறி அடித்தார். என்னுடைய அம்மாவை எதிரி சதீஷ்குமார் இடுப்பிற்கு கீழ் காலால் மிதித்து தள்ளினார். என்னுடைய அத்தை மகள்

நாகராணியை கழுத்தை பிடித்து தூக்கி செவுட்டில் பிரவின்குமார் அடித்தார். என்னுடைய அம்மாவிற்கும், தாத்தாவிற்கும் பலத்த காயம் ஏற்பட்டது. நான் அவர்களை கூட்டிக்கொண்டு கடையம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தேன். எதிரிகள் எங்களை தாக்கி விட்டு செல்லும் போது "இன்றைக்கு தப்பித்து விட்டாய், என்றைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில் தான்" என்று மிரட்டி விட்டு சென்றார்கள். கடையம் அரசு மருத்துமனையிலிருந்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக என் தாத்தாவை அனுப்பி வைத்தார்கள். என் தாத்தா உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். என் அம்மா வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றார். என் அம்மா 6 மாதங்கள் வைத்தியரிடம் சிகிச்சை பெற்றார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.19 13:17:56 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : CC.No.139/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW-3</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரமசிவன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செல்லத்துரை | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | கடையம் | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 17th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கடையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 செல்லத்துரை எனக்கு அப்பா உறவு வேண்டும். 27.10.2020 அன்று காலை 10.00 மணியளவில் எனது மகளின் திருமணம் முடிந்து சாமான் ஆட்டோவில் ஏற்றி கொண்டிருந்தோம். அப்போது, சதீஷ்குமார் பைக்கில் வந்தார். ஆட்டோவை மாற்றி விடச் சொன்னார். நான் ஆட்டோவை 2, 3 நிமிடத்தில் மாற்றி தருகிறேன் என்று சொன்னேன். எதிரி சதீஷ்குமார் தகாத வார்த்தைகளால் திட்டினார். பின்னர், எதிரி சதீஷ்குமார் சென்று விட்டார். பின்னர், எதிரிகள் 3 பேரும் கம்புடன் என்னுடைய வீட்டிற்கு வந்தார்கள். எதிரி சதீஷ்குமார் வைகுண்மணியின் கழுத்தில் கம்பால் அடித்தார். எதிரிகள் சதீஷ்குமாரும், பிரவீன்குமாரும் வைகுண்டமணியை மிதித்து அடித்தார்கள். என்னுடைய மனைவியை சதீஷ்குமார் காலால் மிதித்தார். வைகுண்டமணியின் லுங்கியை உருவி விட்டார். எதிரி சதீஷ்குமார் என்னுடைய அப்பாவின் 2 கண்புருவத்திலும் கண் ஆப்பை

வைத்து அடித்தார். என்னுடைய தங்கை மகள் நாகராணியை எதிரி சதீஷ்குமார் கழுத்தை பிடித்து தூக்கினார். அசிங்கமாக பேசினார்கள். எதிரிகள் பின்னர் ஓடி விட்டார்கள். எதிரி பிரவின்குமார் "என்றைக்கிருந்தாலும் உன் சாவு என் கையில் தான்" என்று மிரட்டி விட்டு சென்றார். என்னுடைய அப்பாவிற்கு பலத்த காயம் ஏற்பட்டது. என்னுடைய அப்பாவை கடையம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். பின்னர், தென்காசி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். அங்கு 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.19 13:18:04 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : CC.No.139/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW-4</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சந்திரகுமாரி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முத்துச்சாமி | தொழில் | : | வியாபாரம் |
| கிராமம் | : | கடையம் | வயது | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 17th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கடையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள். அ.சா.1 செல்லத்துரை எனக்கு மாமா உறவு வேண்டும். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் என் மகளின் திருமணம் முடிந்து பாத்திரங்களை ஆட்டோவில் ஏற்றி கொண்டிருந்தோம். அப்போது, காலை 09.30 மணியிருக்கும். எதிரி சதீஷ்குமார் வந்து "வழியை விடு" என்று சொல்லி என்னுடைய மகன் வைகுண்டமணியிடம் சண்டை போட்டார். என்னுடைய மகன் பாத்திரத்தை ஏற்றி முடிந்தவுடன் வழி விடுகிறேன் என்று சொன்னார். எதிரி சதீஷ்குமார் கெட்ட வார்த்தை பேசிக்கொண்டு சென்றார். சிறிது நேரம் கழித்து, எதிரிகள் 3 பேரும் கம்புடன் எங்கள் வீட்டிற்கு முன்னால் வந்தார்கள். நான் வீட்டிற்குள் சென்று விட்டேன். எதிரி சதீஷ்குமார் என்னை இடுப்பிற்கு கீழ் மிதித்தார். நான் விழுந்து விட்டேன். எதிரி பிரவின் என்னுடைய மகன் வைகுண்டமணியை வருச்சி கம்பால் கழுத்தில் அடித்தார். எதிரி சதீஷ்குமார் வைகுண்டமணியின்

வேஷ்டியை உருவி விட்டார். என்னுடைய மாமனார் செல்லத்துரையை எதிரி சதீஷ்குமார் கண் புருவத்தில் கண் ஆப்பை வைத்து அடித்தார். என்னுடைய மாமாவை கடையம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர், தென்காசி அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் எனது மாமா சிகிச்சை எடுத்துக்கொண்டார். நான் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.19 13:18:16 +0530